VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

VMLS
VINAYAKA MISSION'S LAW SCHOOL

GLOBAL TAMIL LAW CENTRE

SURANA & SURANA
International Attorneys
Chennai | New Delhi

SURANA & SURANA
ACADEMIC INITIATIVES
SINCE 1987

### சுரானா & சுரானா மற்றும் வினாயகா மிஷன் சட்ட கல்லூரி இணைந்து வழங்கும்

# மாநில அளவிலான தமிழ் குடும்ப நல நீதி மன்றம் போட்டிகள் 2024

### செப்டம்பர் 26 முதல் 28 வரை, 2024



**போட்டிகள் நடைபெறும் இடம் :**

**வினாயகா மிஷன் சட்ட கல்லூரி**
**வினாயகா நகர்**
**ராஜிவ் காந்தி சாலை**
**(பழைய மகாபலிபுறம் சாலை)**
**பையனுர், சென்னை 603 104**

**பதிவு செய்ய**
**வேண்டிய நாட்கள்**
**ஜூலை 17 முதல்**
**ஆகஸ்ட் 14 வரை**

**www.moot.in**

O.P. JINDAL GLOBAL
INSTITUTION OF EMINENCE DEEMED TO BE
UNIVERSITY
A Private University Promoting Public Service

வினாயகா மிஷன் சட்ட கல்லூரி உலகப்புகழ் பெற்ற O.P. ஜிண்டால் பல்கலைகழகத்தின் தலைமையின் கீழ் உலகளாவிய ஜிண்டால் சட்டகல்லூரியினால் வழிநடத்தப்படுகிறது.

Jindal Global Law School
India's First Global Law School

# சுரானா & சுரானா மற்றும் வினாயகா மிஷன் சட்ட கல்லூரியும் இணைந்து வழங்கும்

# மாநில அளவிலான தமிழ் குடும்ப நல நீதி மன்றம் 2024

## குடும்ப நல வழக்கு வாத முன் மொழிவு

1. நீனா ஷர்மா மற்றும் நரேஷ் ஷர்மா, மார்ச் 20, 2012 அன்று திருமணம் செய்துகொண்டனர். இவர்கள் டெக்-சிட்டியில் குடியிருக்கின்றனர். இந்திய கலாச்சாரத்தின் படி குடும்பத்தினரும் நண்பர்களும் சூழ அவர்களின் திருமண விழா, கொண்டாடப்பட்டது. 22 வயதான நீனா, முன்னணி தொழில்நுட்ப நிறுவனத்தில் வளர்ந்து வரும் மென்பொருள் பொறியாளராக பணியாற்றிவருகிறார். அவருக்கு இரண்டு வயது மூத்தவர், நரேஷ், தனது ஈ-காம்மெர்ஸ் நிறுவனத்தைத் தொடங்கத் தொழில்முனைவோராக திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்.

2. அவர்களின் திருமணத்தின் ஆரம்ப ஆண்டுகள் மகிழ்ச்சியுடனும் கனவுகளுடனும் நிரம்பியிருந்தன. 2014ல், அவர்கள் தங்கள் மகள் ரீனாவை வரவேற்றனர், மேலும் 2017ல், அவர்கள் மகன் ராஜை பெற்றனர். அவர்களின் வாழ்க்கை நிம்மதியாகவும், புரிதல் உள்ளதாகவும் சென்றுகொண்டிருந்தது. வேலை மற்றும் பெற்றோருடைய கடமை பொறுப்புகளையும் சமநிலைப்படுத்தி வந்தனர். வருடங்கள் கழிந்தன, அவர்களின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கின, மேலும் அவர்களின் உறவில் உள்ள குறைபாடுகள் வெளிப்படத் தொடங்கின.

3. 2020ல் உலகம் முழுவதும் பரவிய பெரிய கிருமி தொற்று, முன்னெப்போதும் இல்லாத சவால்களை ஏற்படுத்தியது. நீனா மற்றும் நரேஷுக்கு, முழு ஊரடங்கு காரணமாக வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கியது. இதனால் இருவருக்கும்

மனக்கசப்புகள் இறுக்கமான சூழ்நிலை உருவானது. ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பதும், வேலைகளின் பழு மற்றும் பெற்றோரின் தேவைகளை சந்திப்பதும் ஒரு சிக்கலான சூழலை உருவாக்கியது.

4. நீனாவின் மென்பொருள் பொறியாளர் பணி, கடுமையான நேர கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டியிருந்ததால், அவரை அன்றாடம் சோர்வடையச் செய்தது. மறுபுறம், நரேஷ் தனது வணிகத் திட்டங்களை சந்தையின் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்ற வேண்டியிருந்தது, இதனால் வேலை நேரம் நீண்டது மற்றும் மன அழுத்தம் அதிகரித்தது. தங்கள் தொழில் பொறுப்புகள் மற்றும் குழந்தைகளுக்கான தேவைகளை சமநிலைப் படுத்துவதில் தம்பதிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

5. தொற்றுநோயின் தாக்கம் அவர்களின் மனநிலையை பெரிதும் பாதித்தது. நீனா தனது பணி மற்றும் இல்லப் பொறுப்புகளால் குழப்பபட்டு திணறியபோது, நரேஷ் பொருளாதார சரிவின் மத்தியில் தனது வணிகத்தை நிலைநிறுத்த போராடினார். ஒருமுறை சீராக இருந்த வீடு, அடிக்கடி வாக்குவாதங்கள் மற்றும் தவறான புரிதல்களால் போர்க்களமாக மாறியது. தொற்றுநோயின் அழுத்தம், அவர்களின் திருமணத்தின் அடிப்படை பிரச்சனைகளை அதிகரித்து, அவற்றை சிதறடிக்கச் செய்தது.

6. மே 2023க்குள், நீனா தன் வரையரை நிலைக்கு வந்திருந்தார். நரேஷின் இடைவிடாத அக்கறையின்மை மற்றும் ஆதரவின்மை அவளது நலத்தைப் பாதித்தது. மன உளைச்சல் மற்றும் சரிசெய்ய முடியாத வேறுபாடுகள் என்று குறிப்பிட்டு, நீனா 1955 ஆம் ஆண்டு இந்து திருமண சட்டத்தின் கீழ் விவாகரத்து மனுவைத் தாக்கல் செய்ய முடிவெடுத்தார். தனது மனுவில், நீனா பல ஆண்டுகளாக சந்தித்த அழுத்தங்களை விவரித்தார், நரேஷின் கட்டுப்பாட்டு செயல்கள் மற்றும் அவளது தொழில் மனப்பாட்டை ஆதரிக்காத தன்மையை விளக்கினார்.

7. நீனாவின் முடிவால் நரேஷ் திகைத்து போனார். அவர்கள் சந்தித்த சிரமங்களை அவர் ஒப்புக்கொண்டார், ஆனால் அவர்களின் வித்தியாசங்களை சரிசெய்ய முடியும் என்று நம்பினார். தனது எதிர்மனுவில், அவர் நீனா தனது தொழில்முறை முன்னுரிமை காரணமாக திருமணத்தையும் குழந்தைகளையும் விட்டு விலகி விட்டதாகக் குற்றம் சாட்டினார். நரேஷ் ரீனா மற்றும் ராஜுக்கான கூட்டுப் பாதுகாப்பை எதிர்பார்த்தார், இரு பெற்றோர்களும் அவர்களின் வளர்ச்சியில் சமமாக பங்காற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

8. சட்டப் போராட்டம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மட்டுமின்றி, அவர்களின் தோல்வியுற்ற திருமணத்தின் கதையை விளக்கும் போராட்டமாகவும் இருந்தது. இருவரும் தங்கள் சுயநலத்தைப் பாதுகாப்பதற்கும் தங்கள் குழந்தைகளுக்கு சிறந்த முடிவைப் பெறுவதற்கும் முயன்றனர்.

9. ரீனா மற்றும் ராஜின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு விவகாரம் விவாகரத்து வழக்கில் மிகுந்த பிரச்சனைக்குரிய விஷயமாக மாறியது. நீனா தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு எதிர்பார்த்தார், அவரது நிலையான வேலை மற்றும் கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் குழந்தைகளுக்கு சிறந்த சூழலை வழங்க முடியும் என்று வலியுறுத்தினார். அவள் மன உளைச்சலின் நிலைத்தன்மையை வலியுறுத்தி, நரேஷின் கணக்கிலில்லாத வேலைநேரம் மற்றும் அடிக்கடி வணிகப் பயணங்களுடன் ஒப்பிட்டு பேசினார்.

10. நரேஷ், இருப்பினும், கூட்டுப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு எதிர்பார்த்தார். அவர் தனது நெகிழ்வான வேலைநேரம் குழந்தைகளின் வாழ்க்கையில் இயல்பாக இருப்பதற்கு அனுமதிக்கிறது என்று நம்பினார். ரீனா மற்றும் ராஜுடன் தனது வலிமையான பிணைப்பை

வெளிப்படுத்தினார், அவர்களின் வளர்ச்சியில் இரு பெற்றோர்களும் சமமாக பங்காற்ற வேண்டும் என்பதுதான் அவர்களின் சிறந்த நலன் என்று வலியுறுத்தினார்.

11. குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு போராட்டத்தின் நடுவில், தில்லியில் வசிக்கும் நீனாவின் பெற்றோர் தங்கள் பேத்தி மற்றும் பேரனுக்கான சந்திப்பு உரிமைகளை கோரி வழக்கு தொடர்ந்தனர். நீனா அவர்களின் கோரிக்கையை ஆதரித்து, அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்துள்ளதாகவும், அவர்களின் உளநிலையான நலனுக்காக அவர்களின் சந்திப்பு உரிமை அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

12. நரேஷ், இருப்பினும், சந்திப்பு உரிமைகளின் மீது சந்தேகம் கொண்டார். குழந்தைகள் மீது நீனாவின் பெற்றோர்கள் தன்னை எதிர்மறையாக சித்தரிப்பார்கள் என்று கூறினார். அவர் வரையறுக்கப்பட்ட மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட சந்திப்புகளை பரிந்துரைத்தார். இதுவே குழுந்தைகளின் நலனை உண்டாகும் என்று வலியுறுத்தினார்.

13. நரேஷ், நீதிமன்றம் குடும்பத்தினரின் உரிமைகளை குழந்தைகளின் நலனுடன் சமநிலைப்படுத்த வேண்டும் என்று தனது கருத்தினை தெரிவித்தார். இது ஒரு முக்கிய விஷயம், ஏனெனில் இந்த முடிவு குழந்தைகளின் குடும்ப உறவையும் அவர்களின் மொத்த மனநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று வலியுறுத்தினார்.

14. குடும்ப வன்முறையிலிருந்து பெண்கள் பாதுகாப்புச் சட்டம், 2005ன் கீழ் துன்புறுத்தப்பட்டதாக நரேஷின் தாயார் நீனா மீது வழக்குப் பதிவு செய்தபோது, சட்ட நடவடிக்கைகள் மற்றொரு சிக்கலான திருப்பத்தை எடுத்தன.

15. குற்றச்சாட்டைக் கடுமையாக மறுத்த நீனா, அவை சட்ட நடவடிக்கைகளைக் கையாள்வதற்கும் அனுதாபத்தைப் பெறுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்று கூறினார். நரேஷின் தாய் இதற்கு முன் இந்தப் பிரச்சினைகளை எழுப்பியதில்லை என்றும், காவல் போரில் நரேஷின் நிலையை வலுப்படுத்துவதற்காக இந்தக் குற்றச்சாட்டுகள் புனையப்பட்டவை என்றும் அவர் வாதிட்டார்.

16. நீனா, நரேஷின் வணிக வெற்றிக்கு தானும் அளித்த பங்களிப்புகள் மற்றும் திருமணத்தின் போது தக்க வைத்த வாழ்க்கை முறையை குறிப்பிட்டு, பராமரிப்பு தொகையை கோரினார். மென்பொருள் பொறியாளராக அவரது சம்பளம் முக்கியமானதாக இருந்தாலும், அது நரேஷின் வளர்ந்து வரும் வணிக வருமானத்துடன் ஒப்பிட முடியாது என்று வாதித்தார்.

17. நரேஷ் பராமரிப்பு கோரிக்கையை எதிர்த்தார், நீனாவின் சம்பளம் அவளது தேவைகளுக்கு போதுமானது என்று வாதிட்டார். குறிப்பாக, குடும்பத்தைவிட தனது தொழிலை முன்னுரிமையாகக் கொண்டதை கருத்தில் கொண்டு, அவளுக்கு தனது வணிக வருமானத்தில் உரிமை இல்லை எனக் கூறினார்.

**வழக்கு வினாக்கள்**:

1. நீனாவின் பெற்றோருக்கு ரீனா மற்றும் ராஜின் முதன்மைக் காவல் வழங்கப்பட வேண்டுமா?
2. நீனாவின் பெற்றோருக்கு வருகை உரிமைகள் வழங்கப்பட வேண்டுமா?
3. குடும்ப வன்முறைச் சட்டம், 2005 இன் கீழ் குடும்ப வன்முறை குறித்து நரேஷின் தாயின் குற்றச்சாட்டு செல்லுபடியாகுமா?
4. நரேஷின் வணிக வெற்றிக்கான பங்களிப்பு மற்றும் அவர்களது திருமணத்தின் போது பேணப்பட்ட வாழ்க்கை முறை ஆகியவற்றின் அடிப்படையில் நீனா ஜீவனாம்சத்திற்கு தகுதியுள்ளவரா?

## SURANA & SURANA AND VINAYAKA MISSION'S LAW SCHOOL STATE LEVEL TAMIL FAMILY LAW MOOT COURT COMPETITION 2024

## FAMILY LAW - PROPOSITION

1. Neena Sharma and Naresh Sharma, residents of Tech-City, tied the knot on March 20, 2012. Theirs was a storybook wedding, marked by the vibrant festivities typical of Indian culture, and attended by family and friends who celebrated the union of two promising individuals. Neena, then 22, was a budding software engineer with a leading tech company, while Naresh, two years her senior, was an ambitious entrepreneur poised to launch his e-commerce venture.

2. The early years of their marriage were filled with joy and shared dreams. They welcomed their daughter, Rena, in 2014, and their son, Raj, in 2017. Their lives seemed perfect, balancing demanding careers with the joys and responsibilities of parenthood. However, as the years passed, the pressures of their professional and personal lives began to mount, and the cracks in their relationship started to show.

3. The Big-Germ pandemic, which swept across the world in 2020, brought unprecedented challenges. For Neena and Naresh, the lockdowns, and the shift to working from home magnified existing tensions. The close quarters and constant presence of each other, coupled with the demands of their jobs and parenting, created a volatile environment.

4. Neena's role as a software engineer required her to juggle multiple projects and meet strict deadlines, often leaving her exhausted by the end of the day. Naresh, on the other hand, had to pivot his business strategy to adapt to the changing market dynamics, which meant longer working hours and increased stress. The couple found it increasingly difficult to balance their work commitments with the needs of their children, Rena and Raj.

5. The pandemic's impact on their mental health was profound. Neena felt overwhelmed by the dual burden of her job and household responsibilities, while Naresh struggled to keep his business afloat amid the economic downturn. Their once harmonious home became a battleground, with frequent arguments and misunderstandings. The pressures of the pandemic had exacerbated the underlying issues in their marriage, pushing them to the brink.

6. By May 2023, Neena had reached her breaking point. The constant emotional neglect and lack of support from Naresh had taken a toll on her well-being. She decided to file for divorce under the Hindu Marriage Act, 1955, citing mental cruelty and irreconcilable differences. In her petition, Neena detailed the years of emotional strain she had endured, highlighting Naresh's controlling behavior and his failure to support her career aspirations.

7. Naresh was taken aback by Neena's decision. He acknowledged the difficulties they had faced but believed that their differences could be reconciled. In his counter-petition, he accused Neena of desertion, claiming that she had abandoned the marriage and their children for her career. Naresh sought joint custody of Rena and Raj, arguing that both parents should play an equal role in their upbringing.

8. The legal battle that ensued was not just a fight for custody and alimony but also a struggle to define the narrative of their failed marriage. Both Neena and Naresh presented their versions of the truth, each trying to protect their interests while also aiming to secure the best possible outcome for their children.

9. The custody of Rena and Raj became the most contentious issue in the divorce proceedings. Neena sought sole custody, arguing that her stable job and structured lifestyle provided a better environment for the children. She emphasized the emotional stability she could offer, contrasting it with Naresh's unpredictable work schedule and frequent business trips.

10. Naresh, however, was adamant about joint custody. He believed that his flexible work schedule allowed him to be actively involved in the children's lives. He highlighted his strong bond with Rena and Raj, insisting that it was in their best interest to have both parents equally involved in their upbringing.

11. Amid the custody battle, Neena's parents, who lived in Delhi, filed a case seeking visitation rights to their grandchildren. They claimed that they had been unjustly restricted from seeing Rena and Raj since the separation. Neena supported their plea, arguing that her parents had played a significant role in the children's lives and that their presence was essential for their emotional well-being.

12. Naresh, however, had reservations about the visitation rights. He expressed concerns over the potential influence Neena's parents might have on the children, particularly in painting him in a negative light. He suggested limited and supervised visitation, emphasizing that the children's best interests should be the primary consideration.

13. The court had to balance the grandparents' rights with the welfare of the children. It was a delicate issue, as the decision would impact the children's relationship with their extended family and their overall emotional health.

14. The legal proceedings took another complicated turn when Naresh's mother filed a case against Neena for harassment under the Protection of Women from Domestic Violence Act, 2005. She alleged that Neena's behaviour had caused her emotional distress, detailing instances of verbal abuse and hostile interactions.

15. Neena vehemently denied the allegations, claiming that they were an attempt to manipulate the legal proceedings and gain sympathy. She argued that Naresh's mother had never raised these issues before and that the accusations were fabricated to strengthen Naresh's position in the custody battle.

16. Neena demanded alimony, citing her contributions to Naresh's business success and the lifestyle she had maintained during the marriage. She argued that her earnings as a software engineer, though substantial, were not comparable to Naresh's income from his thriving business.

17. Naresh opposed the alimony claim, contending that Neena's salary was sufficient for her needs. He argued that she should not be entitled to his business earnings, especially considering her decision to prioritize her career over the family.

**Issues**

1. Whether Neena's parent should be granted primary custody of Rena and Raj?
2. Whether Visitation rights should be granted for Neena's Parents?
3. Whether Naresh's mother's allegations of domestic violence under the Domestic Violence Act, 2005, are valid?
4. Whether Neena is entitled for alimony based on her contribution to Naresh's business success and the lifestyle maintained during their marriage?